# Telephone Conversation between PM and President of the Maldives

April 20, 2020

## பிரதம மந்திரி மற்றும் மாலத்தீவு ஜனாதிபதி இடையிலான தொலைபேசி உரையாடல்

ஏப்ரல் 20,2020

பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடி மற்றும் மாலத்தீவு ஜனாதிபதி மேன்மை பொருந்திய திரு.இப்ராகிம் மொஹ்மத் ஸொலிஹ் உடன் இன்று தொலைபேசியில் உரையாடினார்.

தலைவர்கள தங்கள் நாடுகளில் Covid-19 நோய்தொற்றுகளின் தற்போதைய நிலைக் குறித்து ஒருவருக்கொருவர் புதிப்பித்தனர்.

சார்க் நாடுகளுக்கு இடையில் ஒப்புகொள்ளப்பட்ட ஒருங்கிணைப்பு முறைகள் தீவிரமாக செயல்படுத்தப்படுவதாக அவர்கள் திருப்தி தெரிவித்தனர்.

முன்னதாக மாலத்தீவுக்கு அனுப்பப்பட்ட இந்திய மருத்தவக் குழுவும், இந்தியா பரிசளித்த அத்தியாவசிய மருந்துகளும் தீவுகளில் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்த பங்களித்திருப்பதைக் கேட்டு பிரதம மந்திரி மகிழ்ச்சியடைந்தார்.

மாலத்தீவைப் போன்ற சுற்றுலா சார்ந்த பொருளாதரத்திற்கு தொற்றுநோய் ஏற்படுத்தும் சிறப்பு சவால்களைப் பாராட்டிய பிரதம மந்திரி , கோவிட்- 19 இன் உடல்நலம் மற்றும் பொருளாதார தாக்கதைக் குறைப்பதற்க்கான தொடர்ச்சியான இந்திய ஆதரவை மாலத்தீவின் ஜனாதிபதிக்கு உறுதியளித்தார்.

தற்போதைய சுகாதார நெருக்கடியில் இருந்து எழும் பிரச்சனைகள் மற்றும் இரு தரப்பு ஒத்துழைப்பின் பிற அம்சங்கள் குறித்து தங்கள் அதிகாரிகள் தொடர்பில் இருப்பார்கள் என்று இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

**நியூ டெல்லி**
**ஏப்ரல் 20, 2020**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.